RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s146

OPEN ACCESS

# குறிஞ்சிப்பாட்டு - வரலாற்றுப் பார்வை

சி. வடிவேலன் [அ,*]

[அ] தமிழ்த்துறை, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புத்தூர், சீர்காழி, நாகப்பட்டினம், தமிழ்நாடு, இந்தியா

# Kurinchipattu - Historical Perspective

S. Vadivelan [a,*]

[a] Department of Tamil, Ponmana Chemmal Puratchi Thalaivar MGR Govt Arts and Science College, Puthur, Sirkali-609108, Nagapattinam, Tamil Nadu, India

* Corresponding Author: vadivelpon@gmail.com

Received: 04-11-2020
Revised: 24-06-2021
Accepted: 24-06-2021
Published: 25-06-2021

Check for updates

**ABSTRACT**

The historical problem of Tamil literature is still unresolved among many literary critics and is full of differences of opinion. Among them, the period of Sangam literature and the news of the Apuls are the most controversial. Various reports have been circulating by critics about Kapil, who has sung a number of Sangam songs and is notable for his fame. There are a number of issues with Kapilar's Kurinchipattu reference to it. The purpose of this article is to explore typography. It is noticeable that decimal texts are referred to Kurinchipattu as reference ciphers when they are segmented on a material basis. This is also the case with the description of the Pattuppaṭṭu when they are known in the order of the singers and the singers. The tagline is Kurinchipattu in the field of 'Thozhi Arathodu Nittral'

**Keywords:** Pattuppaṭṭu, Kurinchipattu, Kabilar, Thozhli Arathodu nittral, Nakkerar

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றுச் சிக்கல் பல இன்னமும் இலக்கிய திறனாய்வாளர்களிடையே தீர்க்கப்படாதனவாகவும், கருத்து வேறுபாடுகள் நிறைந்தனவாகவும் உள்ளன. அவற்றுள் சங்க இலக்கியம் பற்றிய காலமும், அப்புலவர்கள் பற்றிய செய்தியும் அதிகக் கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. சங்கப் பாடல்களில் மிகுதியான பாடல்களைப் பாடியவரும் குறிப்பிடத்தக்க புகழ் பெற்றவருமான கபிலர் குறித்துப் பல்வேறு செய்திகள் திறனாய்வாளர்களால் கூறப்பட்டு வருகின்றன. அதில் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டுக் குறித்தும் பல சிக்கல்கள் இருந்து வருகின்றன. அச்சிக்கல்களைக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சங்க இலக்கியங்கள்

கடைச்சங்க இலக்கியங்களாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரு தொகைநூல்களும் குறிக்கப்படுகின்றன. இதனையே "பாட்டு, தொகை என்று பண்டைய உரைகாரர்கள் குறிப்பிடுகின்றனர் பாட்டு எனப்படுகின்ற பத்துபாட்டு நூல்களில் ஐந்து ஆற்றுப்படை நூல்கள். மூன்று அகம் பற்றியன. ஒன்று புறம் சார்ந்தது. மற்ற ஒன்று அகம் புறம் இரண்டும் சார்ந்த நூலாகக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பத்துபாட்டு நூல்களைப் பொருள் அடிப்படையில் பிரிக்கும்போது அவற்றில் குறிஞ்சிப்பாட்டு அகநூலாகக் குறிக்கப்படுவது உணரத்தக்கது (Rasamanikkam, 2003).

பத்துபாட்டு நூல்களைப் பாடினோர், பாடப்பட்டோர் என்ற வரிசை முறையில் அறியும்போது அவற்றின் துறைவிளக்கமும் இந்நிலையில் வைத்தே கூறப்படுகிறது. அதில் குறிஞ்சிப்பாட்டு 'தோழி அறத்தொடு நிற்றல்' என்ற துறையில் பாடப்பட்டுள்ளது. மேலும், ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்பொருட்டுக் கபிலர் அத்துறையின் சிறப்பைக் கூறும் களவு ஒழுக்க வாழ்க்கையினையும் அதன் மேன்மையினையும் பாடி அறிவு புகட்டினார் என்ற வரலாறும் கூறப்படுகிறது.

இங்குக் குறிஞ்சிப்பாட்டினைப் பாடிய கபிலர் தொகை நூல்களைப் பாடிய கபிலரினும் வேறானவரா? என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## குறிஞ்சிப்பாட்டு

"பத்துபாட்டில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு கபிலர் பாடியதாகக் கூறப்படுகிறது. ஆனால் அப்பாட்டு சங்கக் கபிலர் பாடியது அன்று என்றும், அவரே பாடியது என்றும் திறனாய்வாளர்கள் இருவேறு கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்" சங்கக் கபிலர் பாடியது அன்று என்ற கருத்திற்குக் காரணமாக அமைவது அப்பாட்டில் இடம்பெறும் இரண்டு சொற்களே எடுத்துக்காட்டுவர், அவை,

"பைவிரி அல்குற் கொய்தழை தைஇப்

பல்வேறு உருவின் வனப்பமை கோதையெம்

என்ற பாடல் வரியில் 'அல்குல்' என்ற சொல்லாகும். அல்குல் என்பது பெண்குறியை உணர்த்தும் சொல் என்று குறிக்கப்படுகிறது" பெண்குறியின் பெயரைப் பண்டைப் புலவர்கள் யாரும் கையாண்டது இல்லை. ஆதலின், இப்பாட்டு சங்கக் கபிலர் பாடியது ஆகாது என்று காரணம் கூறப்படுகிறது (Vijayarani, 1994; Swaminatha Iyer, 1986; Venkatarajulu Reddyar, 1936).

மேற்கூறிய கருத்தை வே. வேங்கடராஜீலு ரெட்டியார் மறுத்துக் கூறுகையில் 'பண்டைச் செய்யுட்களில் அல்குல் என்பது பக்கத்தையும் மகளிரின் அரை, புட்டம் என்னும் உறுப்புக்களையும் குறித்து வந்துளதே' யன்றிப் பெண்குறியைக் குறித்து வரவில்லை. இதனால் அல்குல் என்பது பெண்குறிக்குப் பெயரன்று என்பது போதரும். ஆகவே இது காரணமாகக் குறிஞ்சிப்பாட்டு பாடினவர் கபிலரல்லர் என்பது அமையாது" என விளக்கம் தருகின்றார்" (Venkatarajulu Reddyar, 1936). அடுத்து,

மாமலை வாயு சூழ்பு கறுப்பக் கானம்

கல்லென்று இரட்டப் புள்ளினம் ஒலிப்ப" (வரி:227-228)

என்ற பாடல் வரியில் வரும்' இரட்ட' என்ற சொல்லாகும் (Swaminatha Iyer, 1986). இரட்டுதல் என்னும் சொல் 'யானைமணியிரட்ட' என்பது போலவே பண்டு வழங்கியதன்றி ஒலித்தல் என்னும் பொருளில் வரவில்லை. இதனால் கபிலர் பாடியது அன்று என்று கூறப்படுகிறது. இதனையும் வே.வேங்கடராஜீலு ரெட்டியார் தனது நூலில் மறுத்துரைக்கின்றார்"

எனவே, மேற்கூறிய இரண்டு கருத்துக்களும் குறிஞ்சிப்பாட்டு பாடிய கபிலர் குறித்த சிக்கல்களை உணர வைக்கின்றன எனலாம் (Venkatarajulu Reddyar, 1936).

அடுத்து, குறிஞ்சிப்பாட்டுக்குத் துறைவிளக்கம் தரும்போது அதுவும் ஐயத்திற்குரியதாகிறது. ஆரியர்கள் தமிழகத்திற்கு வந்தது சங்க காலத்திற்குப் பிறகே. இக்கருத்தினைப் பல வரலாற்று ஆசிரியர்களும் ஒப்புக் கொள்கின்றனர். இந்நிலையில் சங்கப் கபிலர் பிற்காலத்தில் வந்த ஆரிய அரசனோடு எவ்வகையில் தொடர்பு கொண்டிருக்க முடியும் என்பது சிந்திக்கக் கூடியதாகிறது. இப்படிக் கால நிலையிலும் குறிஞ்சிப்பாட்டு சிக்கலுக்குரியதாகிறது என்பதை அறிய முடிகிறது.

## வரலாற்று நோக்கில் குறிஞ்சிப்பாட்டு

சங்கப் புலவர்களிலே மிகுதியான பாடல்களைப் பாடியவர் கபிலர் என்பதால் அவரின் பாடல்கள் குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் கூறப்படுகின்றன. அதில் குறிஞ்சிப்பாட்டு குறித்துப் பல்வேறு சிக்கல்கள் கூறப்பட்டு வருகின்றன. அவற்றைத் தெளிவு செய்யும் வகையில் கபிலரால் பாடப்பட்ட அரசர்கள், அவ்வரசர்களைப் பாடிய பிற புலவர்கள், கபிலரைப் பாடிய புலவர்கள், கபிலரால் பாடப்பட்ட புலவர்கள் என்கிற உறவுநிலையில் குறிஞ்சிப்பாட்டினை வரலாற்று நிலையில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## கபிலர் பாடல் வழி அரசர்கள்

கபிலர் அகப்பாடல்களில் காரி, ஓரி, நள்ளி ஆகிய மன்னர்களைக் குறிப்பிடுகின்றார். அதேபோன்று புறப்பாடல்களில் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன், பாரி, மலையமான் திருமுடிக்காரி, பேகன், விச்சிக்கோ, இருங்கோவேள், அகுதை போன்றவர்கள் பாடபட்டுள்ளனர்.

## கபிலரைப் பாடிய புலவர்கள்

கபிலரைப் பாடிய புலவர்களாக மாறோக்கத்து நப்பசலையார், பெருங்குன்றூர்க் கிழார், நக்கீரர், பொருந்தில் இளங்கீரனார் ஆகிய நால்வர் குறிப்பிடப்படுகின்றனர். மேலும், கபிலரால் பாடப்பட்ட புலவராகக் கழாஅத்தலையார் மட்டும் குறிக்கப்படுகின்றார்.

மேற்கூறிய கருத்துகளை நோக்கும்போது கபிலரைப் பாடிய புலவர்கள் என்பதில் சிலர் கபிலருக்கு முற்பட்டும், சிலர் கபிலர்க்குப் பிற்பட்ட காலத்திலும் வாழ்ந்தவர்களாகத் தெரிய வருகின்றது. இதனை அப்புலவர்கள் பாடிய பிற மன்னர்கள் மூலமும் அம்மன்னர்களைப் பாடிய கபிலர் மூலமும் ஆராயும்போது மாறுபட்ட கருத்துக்களே புலனாகின்றன. குறிஞ்சிப்பாட்டு பாடிய கபிலர் எட்டுத்தொகை நூல்களில் இடம்பெறும் கபிலர் இல்லை என்பதே இங்குச் சிக்கலுக்குரியதாகிறது.

குறிஞ்சிப்பாட்டு பாடப்பட்டதற்கான விளக்கம் தருகையில், ஆரிய அரசன் பிரகதத்தன் குறிக்கப்படுகின்றான். இவன் குறுந்தொகை 184 ஆவது பாடல் பாடியவனாகக் குறிக்கப்படுகின்றான். மேலும், “ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன் என்ற ஒருவனும் சாதவாகன அரசனாகக் குறிக்கப்படுகின்றான்.” (Ramesh, Purusothamanan, 2000) “இவனது காலம் கி.மு.250 இலிருந்து கி.மு.225 வரை என்று குறிக்கப்படுகிறது” இங்கு வேறுவேறு பெயர்களில் ஆரிய அரசன் பிரகதத்தன் குறிக்கப்படுவது சிந்தித்தற்குரியது (Ramesh, Purusothamanan, 2000). இதில் கபிலர் எந்த ஆரிய அரசனுக்குத் தமிழ் கற்பிக்கக் குறிஞ்சிப்பாட்டுப் பாடினார் என்கிற ஐய வினா எழுகிறது.

## பத்துப்பாட்டில் இடம்பெறும் அரசர்கள்

புத்துப்பாடடில் இடம்பெறும் மற்ற அரசர்களைக் குறித்து ஆராயும்போது சில, சிக்கல்களில் தெளிவு ஏற்படலாம். அவர்களில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், தொண்டைமான் இளந்திரையன், சோழன் கரிகாற்பெருவளத்தான். நன்னன் சேய் நன்னன், நல்லியங்கோடன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்

## கபிலரைப் பாடிய புலவர்கள் உறவு நிலை

பத்துப்பாட்டில் இரண்டு நூல்களைப் பாடிய நக்கீரர், கபிலரைப் பாடிய புலவர்களில் ஒருவர். நக்கீரர் நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை என்ற இரண்டினைப் பத்துப்பாட்டில் பாடியுள்ளார். நக்கீரர் பாடிய பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனாரும் பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சியில் பாடியுள்ளார். இவ்வரசனை இவ்விருவர் மட்டுமின்றி இடைக்குன்றூர்க்கிழார், குடபுலவியனார், குறுங்கோழியுர்க் கிழார், கல்லாடனார் போன்றவர்களும் பாடியுள்ளார்கள்.

பாண்டியன் நெடுஞ்செழியன் சேரன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைத் தோல்வியடைச் செய்தது பற்றிப் புறநானூற்றுப் பாடல் ஒன்று தெளிவுறுத்துகிறது" இப்போர்ச் செய்தியினைக் குறுங்கோழியூர்க்கிழார் என்ற புலவரும் பாடியுள்ளார். இச்சேர அரசனையே பொருந்திலிளங்கீரனார் என்ற புலவரும் புறநானூற்றில் பாராட்டிப் பாடியுள்ளார் (Swaminatha Iyer, 1986).

மேற்கூறிய நிகழ்ச்சிகளை ஒப்பிடுகையில் நக்கீரர் கபிலர்க்குக் காலத்தால் பிறப்பட்டவர் என்ற கருத்துப் பெறப்படுகிறது. நெடுநல்வாடையைப் பாடிய நக்கீரர் சங்ககால நக்கீரர் என்று கொண்டால், அந்தக் காலகட்டத்தில் கபிலரால் பாடப்பட்ட குறிஞ்சிப்பாட்டும் சங்ககாலக் கபிலரலர் பாடப்பட்டது எனக் கொள்ளலாம்.

இவ்வாறாகக் கபிலரைப் பாராட்டிப் பாடிய நக்கீரர், பொருந்திவிளங்கீரனார் இவர்களின் பாடல்களில் வழியும், பாண்டியன் நெடுஞ்செழியன், அவனிடம் தோல்வி கண்ட யானைக்கட்சேண் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஆகிய இருவரின் வரலாறு கொண்டும் குறிஞ்சிப்பாட்டைப் பாடிய கபிலர், அவர் பெயர் தாங்கிய வேறு கபிலர் என்பது புலனாகிறது.

## கபிலரால் பாடப்பட்ட புலவர் உறவுநிலை

கபிலரால் பாடப்பட்ட புலவராகக் கழாஅத்தலையார் குறிக்கப்படுகின்றார். அதாவது, "கபிலர் பாரி இறந்தபின் அவன் மகள்கள் இருவருக்கும் மணம் முடித்து வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விச்சிக்கோ என்ற அரசனிடம் முதலில் வேண்டுகிறார். ஆனால், அவ்வரசன் அவர்களை மணக்க மறுத்து விடுகிறான்". பின் இருங்கோவேள் என்ற அரசனிடம் அழைத்துச் செல்கின்றார். இவ்வரசனும் அவர்களை மணக்க மறுத்து விடுகிறான். இந்நிலையில் கபிலர் அவனை இகழ்ந்து பாடுகையில், கழாஅத்தலையார் என்ற புலவரின் சிறப்பு மற்றும் மேன்மையினை எடுத்துக்காட்டுகின்றார் (Swaminatha Iyer, 1986).

ஆப்பாடல்கள் மூலம் கபிலருக்கு முற்பட்டவராகக் கழாஅத்தலையார் வாழந்துள்ளார் என்பதும், கபிலர் இருங்கோவேளைப் பாடும்போது கழாஅத்தலையார் உயிரோடு இல்லை என்பது; உணரத்தக்கது.

"கழாஅத்தலையாரால் சேரமான் பெருஞ்சேரலாதன்" "சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன்" 15 ஆகிய இரு அரசர்களும் பாடப்பட்டுள்ளனர். கழாஅத்தலையார் மட்டுமின்றி, சேரமான் பெருஞ்சேரலாதனை வெண்ணிக்குயத்தியார் என்ற புலவரும், குடக்கோ நெடுஞ்சேரலாதனைப் பரணரும் புறநானூற்றுப் பாடல்களில் பாடியுள்ளமை தெரிய வருகிறது. இதனால் இம்மூவரும் சமகாலத்தில் வாழ்ந்த புலவர்கள் ஆகின்றனர் (Swaminatha Iyer, 1986).

மேற்கூறிய கருத்துக்கள் வழிப் பத்துப்பாட்டில் இடம்பெறும் பட்டினப்பாலையும், பொருநராற்றுப்படையும் பிற்கால அரசர்களைப் பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்டிருப்பது அறியப்படுகிறது. ஆதலின் அக்காலக் கட்டத்தில் இடம்பெற்ற குறிஞ்சிப்பாட்டும் பிற்காலத்துப் புலவராகிய வேறு ஒரு கபிலரால் பாடப்பட்டிருக்க வேண்டும் என்பதும் உய்த்துணரப்படுகிறது.

இவ்வாறாக, கபிலர் பாடிய கழாஅத்தலையார் வரலாறு கொண்டு ஆராய்கையில் ஒரே பெயருடைய இரண்டு அரசர்கள் வாழ்ந்திருப்பதும், பத்துப்பாட்டு நூல் வரிசையில் இருவெறு காலங்கள் புலனாவதும் அறியப்படுகின்றன. இதனால் பத்துப்பாட்டில் இடம்பெறும் குறிஞ்சிப்பாட்டைப் பாடிய கபிலர் சங்கத்தொகைப் பாடலகள் பாடிய கபிலரினும் வேறான கபிலர் என்ற கருத்துப் பெறப்படுகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியங்களாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இருதொகுப்புகள் இருந்தாலும், அதில் பத்துப்பாட்டு சங்க காலத்திற்குப் பிற்பட்ட தொகுப்பு நூல் எனப்பெறப்படுகிறது. பத்துப்பாட்டில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டைப் பாடிய கபிலர் சங்கத்தொகைநூல் பாடிய கபிலரினும் வேறானவர் என்பது உய்த்துணரப்படுகிறது. காலநிலையில் கபிலரைப் பாடிய புலவர்கள், கபிலரால் பாட்டு பிற்காலத்தில்

எழுதிய தொகுப்புநூல் வரிசை என்பதும் அந்நூலினைப் பாடியவர் கபிலர் பெயர் தாங்கிய வேறு ஒரு புலவர் அல்லது வேறு கபிலரால் எழுதிச் சேர்க்கப்பட்டது என்பதும் பெறப்படுகின்றன.

## References


Ramesh, P., Purusothamanan, VP., (2000) sangakala mannargal nilaigal, World Tamil research Centre, Chennai, India.

Rasamanikkam, Ma., (2003) Kala Arachchi, Alamu Pathipaggam, Chennai, India.

Swaminatha Iyer U. V., (1986) Pattuppaṭṭu mulamum Natchinikiniyar uraiyum, Commericial Press, India.

Venkatarajulu Reddyar, V., (1936) Kapilar, University of Madras, Chennai, India.

Vijayarani, A., (1994) Sanga Kaala Kapilar, PhD dissertation, Subramania Bharathi School of Tamil Language and Literature, Pondicherry University, Pondicherry, India. https://shodhganga.inflibnet.ac.in/handle/10603/5726



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License